# சிறப்பு சார்பு நீதிமன்றம் (LAOP) எண்.2 , ஜெயங்கொண்டம்

அசல் வழக்கு எண்.100/2026

நாள்: 01.08.2026

பி.வா.சா. 1– வேல்முருகன்

2026–ம் ஆண்டு ஆகஸ்ட் 01–ம் நாள் (1969–ம் ஆண்டு 54–வது விதியின் 9–வது பிரிவின் ஏற்பாட்டின்படி) திரு.தனஞ்செயன், கிரேடு–II பெஞ்ச் கிளர்க் அவர்களால் உறுதிமொழி செய்யப்படுகிறது.

**வாதி தரப்பு குறுக்கு விசாரணை தொடர்ச்சி**

எனக்கு அருளானந்தபுரத்தை சேர்ந்த சவரிமுத்து என்பவரை தெரியுமா என்றால் தெரியாது. அவர் எனக்கு எதிராக புரோநோட்டு வழக்கு தாக்கல் செய்து தீர்ப்பு ஏற்பட்டு கடனை திருப்பி செலுத்திவருகிறேன் என்றால் கடனுக்காக சொத்தை எழுதிக்கொடுத்துள்ளேன். சவரிமுத்து என் மீது நீதிமன்றத்தில் வழக்கு போட்டார் என்றால் சரிதான். தாவா புரோநோட்டில் உள்ள கையெழுத்து என்னுடைய கையெழுத்து இல்லை என்று நீதிமன்றத்தின் மூலம் நடவடிக்கை எடுக்கிறேனா என்றால் இல்லை. தாவா புரோநோட்டில் உள்ள முத்திரை வில்லையில் உள்ள கையெழுத்து என்னுடையது தான் என்றால் சரியல்ல. தாவா புரோநோட்டில் உள்ள முத்திரை வில்லையில் நான் கையெழுத்து போடும்போது சாட்சிகள் மற்றும் எழுத்துக்காரர்கள் இருந்தார்கள் என்றால் சரியல்ல. என் முதல் விசாரணை வாக்குமூலத்தில் வாதி என்னிடம் கந்துவட்டி வசூல் செய்துள்ளதாக நான் சொல்லவில்லை. வட்டி கேட்டு மிரட்டியுள்ளதாக சொல்லியுள்ளேன் என்றால் சரிதான். அதற்காக புகார் கொடுத்தேனா என்றால் இல்லை. என் முதல் விசாரணை வாக்குமூலத்தில் ரூ.40 ஆயிரம் பணம் வாங்கினேன் என்றும் 5% வட்டியுடன் முழு பணத்தையும் செலுத்திவிட்டதாக சொல்லியுள்ளது பொய்

என்றால் சரியல்ல. நான் புரோநோட்டில் கண்டபடி ரூ.3 லட்சம் வாதியிடம் வாங்கினேன் என்றாலும் ரூ.2 லட்சம் வாங்கியதாக முதல் விசாரணையில் பொய்யாக சொல்லியுள்ளேன் என்றால் சரியல்ல. நான் வாதியிடம் 10.05.2023 அன்று ரூ.3 லட்சம் பெற்றுக்கொண்டு சாட்சி மற்றும் எழுத்துக்காரர் முன்னிலையில் தாவா புரோநோட்டை கையெழுத்து போட்டு கொடுத்தேன் என்றால் சரியல்ல. தாவாப்படி தீர்ப்பாக வேண்டும் என்றால் சரியல்ல.

திறந்த நீதிமன்றத்தில் வைத்து சாட்சி சொன்னவை என்னால் தட்டச்சருக்கு திருப்பி சொல்லப்பட்டு அவரால் தட்டச்சிடப்பட்டு சாட்சிக்கு படித்து காட்டி அவரால் சரி என ஒப்புக் கொள்ளப்பட்டு கையெழுத்திடப்பட்டது.

/ ஒப்பம் / V. பிரேம்குமார்,
சிறப்பு நீதிபதி எண்.2,
ஜெயங்கொண்டம்.